செ.கு.எண்: 100 மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை - 10 .8.2011

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மணப்பாறை – குளித்தலை சாலையில் 10.8.2011 அன்று காலை வேலைக்கு செல்லும் பொருட்டு சாலை ஓரத்தில் நின்று கொண்டிருந்தவர்கள் மீது எதிர்பாராத விதமாக காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அவர்களின் வாகனம் மோதியதில் மொண்டிப்பட்டி கிராமம், களத்துப்பட்டியை சேர்ந்த திரு. கருத்தான் என்பவரின் மகன் திரு. சரவணன் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன். இந்த விபத்தில் அகால மரணமடைந்த திரு. சரவணனின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தச் சம்பவத்தில் மொண்டிப்பட்டி கிராமம், களத்துப்பட்டியை சேர்ந்த திரு. வீரபத்திரன் மகன் திரு. ஜெயக்குமார், திரு. ரெங்கசாமி மகன் திரு. சதீஷ் மற்றும் வாகனத்தில் பயணம் செய்த மணப்பாறை காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், வாகன ஓட்டுநர் ஆகியோர் காயமடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவருக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள அனைவரும் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. சரவணனின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்த திரு. ஜெயக்குமார் மற்றும் திரு. சதீஷ் ஆகிய இருவருக்கும் தலா 15,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்